DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 118/2022**

Deposition of witness for Prosecution அ.சா.3

Name : சுப்பிரமணி
Father/ Husband Name : சுப்புராமு
Village :
Taluk :
Calling :
Age :

1-ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 04.08.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் மங்களலத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். ஆஜர் 1ம் எதிரியையும், மற்ற எதிரிகளையும் தெரியும். கடந்த 2021-ம் ஆண்டு பொங்கலன்று ஊர்ப் பொது மக்கள் எல்லாம் சேர்ந்து கணேசன் மாரியத்தாள் கோவில் முன்பாக பொங்கல் வைத்தோம். அப்போது சத்தம் கேட்டது. நான் சென்று கேட்டபோது 3-ம் எதிரி முத்துமகன் சீனிவாசன் அ.சா.1 யை அடித்துவிட்டதாக சொன்னார்கள். நான் நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுதரப்பில் குறுக்கு விசாரணை:**

1. கடந்த 17.01.2021-ம் தேதி ஆறாவயல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த போது கடந்த 15.01.2021-ம் தேதி பகல் 11.00 மணிக்கு ஊரிலுள்ள மந்தையில் பொங்கல் வைத்து கொண்டிருந்த போது எதிரிகள் நால்வரும் அ.சா.1யை அசிங்கமாக திட்டினார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது 1,3 எதிரிகள் அ.சா.1யை கையால் அடித்ததாக போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல.

சம்பவத்தின் போது 2 வது எதிரி சாட்சி நாராயணி கழுத்தில் இருந்த 7 பவுன் தங்க செயின் அறுத்துவிட்டதாக போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது 4 எதிரி சாட்சி தனலெட்சுமியை தகாத வார்த்தையில் பேசினார் என்று போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல. எதிரிகள் நால்வரும் அ.சா.1 மற்றும் சாட்சிகளை கொலை மிரட்டல் செய்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை.**

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.118/2022**

Deposition of witness for Prosecution அ.சா.4

Name : நடேசன்
Father/ Husband Name : மலையாண்டி
Village :
Taluk :
Calling :
Age :

1-ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 04.08.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது மங்கலத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். கடந்த 2021-ம் ஆண்டு மாட்டுப் பொங்கலன்று காலை 10-11 மணியளவில் அ.சா.1 சொர்ணலிங்கத்தை 3 வது எதிரி கையால் கண்ணத்தில் அறைந்தார். பிறகு ஊர்க்காரர்கள் விலக்கிவிட்டனர். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுதரப்பில் குறுக்கு விசாரணை:**

1. கடந்த 17.01.2021-ம் தேதி ஆறாவயல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்த போது கடந்த 15.01.2021-ம் தேதி பகல் 11.00 மணிக்கு ஊரிலுள்ள மந்தையில் பொங்கல் வைத்து கொண்டிருந்த போது எதிரிகள் நால்வரும் அ.சா.1யை அசிங்கமாக திட்டினார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது 1,3 எதிரிகள் அ.சா.1யை கையால் அடித்ததாக போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது 2 வது எதிரி சாட்சி நாராயணி கழுத்தில் இருந்த 7 பவுன் தங்க செயின் அறுத்துவிட்டதாக போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல.

சம்பவத்தின் போது 4 எதிரி சாட்சி தனலெட்சுமியை தகாத வார்த்தையில் பேசினார் என்று போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல. எதிரிகள் நால்வரும் அ.சா.1 மற்றும் சாட்சிகளை கொலை மிரட்டல் செய்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களால் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.118/2022**

Deposition of witness for Prosecution அ.சா.5

Name : ராமு
Father/ Husband Name : அழகு
Village :
Taluk :
Calling :
Age :

1-ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 04.08.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1.நான் மங்கலத்தில் குடியிருந்து தற்போது விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 17.01.2021-ம் தேதி காலை 11 மணியளவில் அம்மன் கோவில் முன்பாக ஆறாவயல் போலீசார் சம்பவம் இடத்தை பார்த்து மாதிரி வரைபடம் வரைந்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1-ம்எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: (2 முதல் 4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது)**

1. போலீசார் கொடுத்த பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று தெரியுமா என்றால் என்ன எழுதி இருந்தது என்று சொல்லவில்லை, படம் வரைந்திருப்பதாக சொன்னார்கள். என்னிடம் பேப்பரில் போலீசார் தான் கையெழுத்து பெற்றார்கள். இந்த வழக்கிற்கும் 1-ம் எதிரிக்கும் சம்பந்தமில்லை போலீசார் கேட்டுக் கொண்தற்கிணங்க பார்வை மகஜரில் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.